செய்திச் சுருள்

‘கரூரில் இறந்தோரின் குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்குவதில் தவறில்லை’

திருச்சி ஸ்ரீரங்கம் ரயில் நிலையத்துக்கு புதன்கிழமை வந்த சார்லப்பள்ளி ரயிலை வரவேற்று அதன் ஓட்டுநரை கௌரவித்த துரை வைகோ எம்.பி. உள்ளிட்டோர்.

ஸ்ரீரங்கம், ஜூலை 8: கரூர் சம்பவத்தில் இறந்தோரின் குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்குவதில் தவறில்லை என்றார் திருச்சி எம்பி துரை வைகோ.

ஸ்ரீரங்கம் ரயில் நிலையத்தில் திருச்சி- ஹைதராபாத் (சார்லப்பள்ளி) ரயில் ஸ்ரீரங்கத்தில் புதன்கிழமை முதல் நின்று சென்றதைத் தொடர்ந்து ஸ்ரீரங்கம் ரயில் நிலையத்தில் பயணிகளுக்கு இனிப்பு வழங்கிய அவர் மேலும் கூறியது:

திருச்சி -ஹைதராபாத் (சார்லப்பள்ளி) இடையிலான சிறப்பு வாராந்திர ரயிலை நிரந்தர ரயிலாக மாற்றம் செய்வது தொடர்பாக மத்திய ரயில்வே அமைச்சருக்கும், திருச்சி மண்டல ரயில்வே மேலாளருக்கும் நேரிலும் கடிதம் எழுதியும் நான் வலியுறுத்தியதை ஏற்றுக் கொண்டதற்கு நன்றி.

இதேபோல திருவெறும்பூர் ரயில் நிலையத்தில் தாம்பரம் விரைவு ரயில் நின்று செல்லவும், புதுகை ரயில் நிலையத்தில் விரைவு ரயில்கள் நின்று செல்லவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதுபோல கடந்த 2 ஆண்டுகளில் 15 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தவெக அரசுக்கு அரசியல் பக்குவம் தேவை. மக்கள் லஞ்சம், ஊழல் இல்லாத ஆட்சி மாற்றத்தை விரும்பியதால் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

கரூரில் விஜய் பிரசாரத்தின்போது இறந்தோரின் குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்குவதில் தவறில்லை. அவர்கள் ஏழைகள்தான். மத்திய அரசுடன் இணக்கமாக இருந்தால்தான் நிதியைப் பெற முடியும் என்றார் அவர். பேட்டியின்போது ஸ்ரீரங்கம் பகுதி மதிமுக செயலர் ராமமூர்த்தி, சண். நாகசுந்தரம், வையம்பட்டி ராஜா, மணவை தமிழ் மாணிக்கம் உள்ளிட்ட திரளான மதிமுகவினர் உடனிருந்தனர்.

இளைஞரிடம் ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்ய முயற்சி: 6 பேர் கைது

திருச்சி, ஜூலை 8: திருச்சியில் இளைஞரிடம் ஆயுதங்களை காட்டி வழிப்பறி செய்ய முயன்ற 6 பேரை போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

திருச்சி ஸ்ரீரங்கம் கீழசித்திரை வீதியைச் சேர்ந்தவர் பா. சுரேஷ் (33). இவர், செவ்வாய்க்கிழமை பிற்பகல் பாலக்கரை மேல கொச வீதி உய்யக்கொண்டான் வாய்க்கால் அருகே சென்றபோது அங்கிருந்த 6 பேர் கும்பல், அவரிடம் அரிவாளைக் காட்டி வழிப்பறி செய்ய முயன்றனர். இதையடுத்து அங்கிருந்து தப்பி வந்த சுரேஷ், பாலக்கரை காவல் நிலையத்தில் அளித்த புகாரின்பேரில், போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர்.

இதுதொடர்பாக பாலக்கரை பீமநகரைச் சேர்ந்த வெ. வீரமுத்து (28), பி. கிரிஸ்டோன் (22), எப். பிரிட்டோ (21), எல். சாமிராஜ் (47), அ. ஜேக்கப் (42), பா. எபினேசர் சரண் (29) ஆகிய 6 பேரையும் கைது செய்த போலீஸார், அவர்களிடமிருந்து ஆயுதங்களைப் பறிமுதல் செய்தனர்.

போதை மாத்திரைகள் விற்ற பெண் உள்பட இருவர் கைது

திருச்சி, ஜூலை 8: திருச்சியில் போதை மாத்திரைகள் விற்ற பெண் உள்பட இருவரை போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

திருச்சி அரியமங்கலம் காவல் நிலைய எல்லைக்குள்பட்ட பகுதியில் போதை மாத்திரைகள் விற்கப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து, காவல் ஆய்வாளர் வெற்றிவேல் தலைமையிலான போலீஸார் அங்கு சோதனை மேற்கொண்டனர்.

அப்போது, அரியமங்கலம் பாப்பம்மாள் காலனி ரயில்வே கடவுப் பாதை அருகே போதை மாத்திரைகள் விற்ற சங்கிலியாண்டபுரத்தைச் சேர்ந்த எஸ். தேவி (43) என்பவரை போலீஸார் கைது செய்தனர்.

இதேபோல, ஸ்ரீரங்கம் அம்பேத்கர் நகர் கல்லறைத் தோட்டம் அருகே போதை மாத்திரைகள் விற்ற பாலக்கரை பகுதி என். ரகுராம் (23) என்பவரை ஸ்ரீரங்கம் போலீஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இருவரிடமிருந்தும் ரூ.10 ஆயிரம் மதிப்பிலான 83 போதை மாத்திரைகள், போதை ஊசிகள், திரவ போதை மருந்துகள், கைப்பேசி, ஒரு இருசக்கர வாகனம் ஆகியவற்றை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

இடைநின்ற மாணவர்கள் சிங்கப்பெண் போலீஸாரால் மீண்டும் பள்ளியில் சேர்ப்பு

மாணவர்களை பள்ளியில் மீண்டும் புதன்கிழமை சேர்த்த சிங்கப்பெண் அதிரடிப்படையினர்.

திருச்சி, ஜூலை 8: திருச்சி அருகே தேனேரிப்பட்டியில் சரிவர வராத மாணவர்களை மீண்டும் பள்ளியில் சேர்த்த சிங்கப்பெண் அதிரடிப்படையினருக்கு ஆசிரியர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் அருகே தேனேரிப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் அண்மையில் நடந்த விழிப்புணர்வு நிகழ்வுக்குச் சென்ற சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப்படை காவல் உதவி ஆய்வாளர் ஜோதிலட்சுமி, காவலர்கள் யுவராணி, சினேகா ஆகியோர் பள்ளிக்கு வராத மாணவர்கள் பற்றி தலைமையாசிரியரிடம் விசாரித்தனர். அப்போது அசூர் மேலத்தெருவை சேர்ந்த தங்கவேலு மகன் பிரதீப் (பத்தாம் வகுப்பு) என்பவர் கடந்த ஓராண்டாகவும், அதே பகுதியைச் சேர்ந்த சங்கர் மகன் சண்முகமணி (9 ஆம் வகுப்பு) கடந்த 2 ஆண்டுகளாகவும், அசூர் மாரியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த 9 ஆம் வகுப்பு மாணவி ஒருவரும் பள்ளிக்கு சரிவர வரவில்லை பள்ளித் தலைமையாசிரியர் கற்பூரவாசகி தெரிவித்தார்.

இதையடுத்து சிங்கப் பெண் அதிரடிப்படை போலீஸார், மேற்கண்ட மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று விசாரித்து, அந்த மாணவர்களுக்கு அறிவுரை கூறி, மீண்டும் புதன்கிழமை பள்ளியில் சேர்க்க வைத்தனர். இதற்கு பள்ளி ஆசிரியர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

தடையில்லா பாசன வசதியை உறுதி செய்ய வேண்டும்

நீர்வளத் துறை அமைச்சர் என். ஆனந்த் வலியுறுத்தல்

திருச்சி மாவட்ட ஆட்சியரகத்தில் புதன்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் பேசிய நீர்வளத் துறை அமைச்சர் என். ஆனந்த். உடன் ஆட்சியர் பிரத்திக் தாயள், அரசு செயலர் பிரசாந்த் எம். வாட்னேரே வாரியத் தலைவர் கு.ப. கிருஷ்ணன், பேரவைத் துணைத் தலைவர் மு. ரவிசங்கர், எம்எல்ஏக்கள் நவல்பட்டு விஜி உள்ளிட்டோர்.

திருச்சி, ஜூலை 8: விவசாயிகளுக்கு தடையின்றிப் பாசன வசதி கிடைப்பதை நீர்வளத் துறை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும் என நீர்வளத் துறை அமைச்சர் என். ஆனந்த் வலியுறுத்தினார்.

திருச்சி மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் ஊரக வளர்ச்சித்துறை மற்றும் நீர்வளத்துறை செயல்பாடுகள், மாவட்டத்தின் நடைபெறும் துறையின் வளர்ச்சித் திட்டப் பணிகளின் முன்னேற்ற நிலை குறித்த ஆய்வுக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது. அமைச்சர் என். ஆனந்த் தலைமை வகித்தார். ஆட்சியர் பிரத்திக் தாயள் முன்னிலை வகித்தார்.

தொடர்ந்து அமைச்சர் என். ஆனந்த் பேசுகையில், புதிய குடிநீர் இணைப்புகளை தாமதமின்றியும், எந்தவித புகாருக்கும் இடம் அளிக்காமல் விரைந்து வழங்க வேண்டும். வீட்டு வசதி திட்டங்களின் கட்டுமானப் பணிகளை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நிறைவு செய்ய வேண்டும்.

மக்களின் அன்றாட வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில், அனைத்து வளர்ச்சித் திட்டங்களும் விரைவாகவும் தரமான முறையிலும் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதே முதல்வர் ஜோசப் விஜய் தலைமையிலான அரசின் முக்கிய நோக்கம். அலுவலர்கள் அதற்கேற்ப தங்களது பணிகளைத் திட்டமிட வேண்டும்.

மாவட்டத்தின் முக்கிய பாசன வாய்க்கால்கள், பாசன வசதி பெறும் ஆயக்கட்டுப் பகுதிகள், 2025 2026ஆம் ஆண்டிற்கான அறிவிப்புப் பணிகள், கால்வாய் புனரமைப்பு, கரைப் பாதுகாப்பு, ஒழுங்குமுறை மதகுகள், தடுப்பணைகள், சிறப்பு தூர்வாரும் பணிகள் மற்றும் நீர்வளக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம் குறித்து வாரந்தோறும், மாதந்தோறும் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

திருச்சி விமான நிலைய விரிவாக்கப் பணிகளுக்கு வருவாய்த் துறையிலிருந்து முடிக்க வேண்டியவற்றை விரைந்து முடிக்க வேண்டும்.

நீர்ப்பாசனக் கட்டமைப்புகளை மேலும் வலுப்படுத்தி, விவசாயிகளுக்கு தடையின்றி பாசன வசதி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றார்.

கூட்டத்தில், ஊரக வளர்ச்சித் துறை அரசு செயலர் பிரசாந்த் எம். வாட்னேரே, பேரவை துணைத் தலைவர் மு. ரவிசங்கர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத் தலைவர் கு.ப. கிருஷ்ணன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) த. சுவாதிஸ்ரீ, எம்எல்ஏ-க்கள் நவல்பட்டு எஸ்.விஜி, எம்.விக்னேஷ், .ரா. கதிரவன், நீர்வளத் துறை தலைமைப் பொறியாளர்கள் எஸ். சிவக்குமார், வி. சுகுமாரன், நீர்வளத் துறை கண்காணிப்புப் பொறியாளர் எஸ். பழனிவேல், செயற்பொறியாளர்கள் ஏ. நித்யானந்தன், எஸ்.ஜே. சிவக்குமார், வி. கனிமொழி, கே.ஆர். சுஜா, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) சு.வடிவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தந்தை பெரியார் அரசுக் கல்லூரியில் கலந்தாய்வு நிறைவு: 300 இடங்கள் காலி

திருச்சி, ஜூலை 8: திருச்சி தந்தை பெரியார் அரசுக் கல்லூரியில் இளநிலைப் பிரிவுகளுக்கு இரண்டு கட்ட கலந்தாய்வு நிறைவுற்ற நிலையில் 82 சதவீத இடங்கள் நிரம்பின. மேலும், 300 இடங்கள் காலியாகவுள்ளன.

திருச்சி தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இளநிலையில் தமிழ், ஆங்கிலம், வரலாறு, கணிதம், இயற்பியல், கணினி அறிவியல், விஸ்காம் உள்ளிட்ட 15 துறைகளில் 1,600 இடங்கள் உள்ளன.

82 சதவீத இடங்கள் நிரம்பின: இந்நிலையில் இளநிலைப் பிரிவில் 2026-27-ஆம் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை பொது கலந்தாய்வு கடந்த ஜூன் 5-இல் இருந்து நடைபெற்றது.

2 கட்ட கலந்தாய்வுகள் ஜூன் 30-ஆம் தேதியுடன் நிறைவடைந்து முதலாமாண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் ஜூலை 1-இல் தொடங்கின. இக்கல்லூரியில் 15 துறைகளில் மொத்தமுள்ள 1600 இடங்களில் 82 சதவீதமான 1300 இடங்கள் நிரம்பியுள்ளன. மேலும், 300 இடங்கள் காலியாகவுள்ளன.

பாடவாரி விவரம்: தமிழில் மொத்தமுள்ள 120 இல் 106 இடங்களும் (88%), ஆங்கிலம் 120 இல் 65 (54%) வரலாறில் 180 இல் 140 (77%), பொருளியல் 180 இல் 136 (75%), வணிகவியல் 240 இல் 216 (90%), கணிதம் 80 இல் 60 (75.%), இயற்பியல் 80 இல் 62 (77%), வேதியியல் 120 இல் 99 (82%), புள்ளியியல் 40 இல் 34 (85%), தாவரவியல் 60 இல் 48 (80%), விலங்கியல் 80 இல் 77 (96%), கணினி அறிவியல் 60 இல் 57 (95%), கணினிப் பயன்பாட்டியல் 120 இல் 118 (98%), புவியியல் 80 இல் 44(55), விஷுவல் கம்யூனிகேஷன் 40 இல் 38 (95) இடங்கள் என மொத்தம் 82 சதவீத இடங்கள் நிரம்பியுள்ளன. இவற்றில் அதிகபட்சமாக கணினிப் பயன்பாட்டியலில் 98 சதவீத இடங்கள் நிரம்பியுள்ளன. இதைத் தொடர்ந்து விலங்கியல், கணினி அறிவியில், விஷுவல் கம்யூனிகேஷன் ஆகிய பாடப்பிரிவுகளில் 95 சதவீதத்துக்கு அதிகமான இடங்களும், வணிகவியலில் 90 சதவீத இடங்களும், தமிழில் 88 சதவீத இடங்களும் நிரம்பியுள்ளன.

300 காலியிடங்கள்: இளநிலைப் பிரிவில் 15 துறைகளில் மொத்தமுள்ள 1600 இடங்களில் 1300 இடங்கள் நிரம்பிவிட்ட நிலையில், 300 இடங்கள் காலியாகவுள்ளன. இதில் அதிகபட்சமாக ஆங்கிலம் பிற்பகல் (ஷிப்ட்) பிரிவில் 40 இடங்கள் காலியாகவுள்ளன. இதேபோல, வரலாறு பிற்பகல் பிரிவில் 26 இடங்களும், பொருளியல் பிற்பகல் பிரிவில் 25 இடங்களும், புவியியல் தமிழ் பிரிவில் 20 இடங்களும் காலியாகவுள்ளன. இதேபோல அனைத்து பாடப் பிரிவுகளிலும் 1 முதல் 20 இடங்கள் வரை காலியாகவுள்ளன.

அனைத்து இடங்களும் நிரப்பப்படும்: இதுகுறித்து கல்லூரி முதல்வர் க. அங்கம்மாள் கூறியதாவது: எங்கள் கல்லூரியில் இரண்டு கட்ட கலந்தாய்வுகளில் மொத்தம் 82 சதவீத இடங்கள் நிரம்பியுள்ளன. தொடர்ந்து மூன்றாம் கட்ட கலந்தாய்வும் நடைபெறுகிறது.

ஆனால், பொறியியல், மருத்துவம், பாராமெடிக்கல் உள்ளிட்டவற்றின் கலந்தாய்வுக்காக மாணவர்கள் காத்திருக்கின்றனர். மேற்கண்ட கலந்தாய்வு நிறைவடைந்தபின் மாணவர் சேர்க்கை அதிகரிக்கும். இதையடுத்து, இடஒதுக்கீடு மாற்றம் (கோட்டா கன்வெர்ஷன்) அளிக்கப்படும். இதன்மூலம் காலியாகவுள்ள இடங்களில் அந்தந்த பிரிவு மாணவர்களுக்கும் சேர்க்கை வழங்கப்பட்டு அனைத்து இடங்களும் நிரப்பப்படும்.

இன்று வகுப்புகள் தொடக்கம்: 2 கட்ட கலந்தாய்வுகளில் சேர்க்கை பெற்ற மாணவர்களுக்கு கடந்த ஜூலை 1 முதல் புதன்கிழமை வரை அனைத்துத் துறைகள் சார்ந்த வழிகாட்டி நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில், உதவித் தொகைக்கு விண்ணப்பித்தல், பேருந்து, ரயில் பயண அட் டை பெறுதல், என்எஸ்எஸ், என்சிசியில் சேர்க்கை பெறுதல் உள்ளிட்ட அனைத்து விஷயங்கள் குறித்தும் மாணவர்களுக்கு எடுத்து ரைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து வியாழக்கிழமை முதல் முதலாமாண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் தொடங்குகின்றன என்றார்.

சேவைக் குறைபாடு

தனியார் நிதி நிறுவனம் ரூ.1.50 லட்சம் இழப்பீடு வழங்க உத்தரவு

திருச்சி, ஜூலை 8: சேவை குறைபாடு ஏற்படுத்திய தனியார் நிதி நிறுவனம் ரூ. 1.50 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டுமென திருச்சி மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது.

திருச்சி அரியமங்கலம் மலையப்ப நகரைச் சேர்ந்த பி. உமாசங்கர் என்பவர் டிவிஎஸ் கிரெடிட் நிதி நிறுவனத்தில் 11.03.2016 அன்று தனது காரை அடமானம் வைத்து ரூ. 5 லட்சம் கடன் வாங்கி, கட்டி முடித்தார். ஆனால் நிதி நிறுவனத்தினர், கடனை அடைத்ததற்கான தடையில்லாச் சான்றிதழை வழங்கவில்லை. இதனால் காரை விற்க முடியாமல் அவதிப்பட்ட அவர், பலமுறை முறையிட்டும் நிதி நிறுவனத்தினர் தடையில்லாச் சான்றிதழை வழங்காமல் அலைக்கழித்தனர்.

இதனால் மன உளைச்சலுக்கு ஆளான உமாசங்கர் உரிய நிவாரணம் கோரி கடந்த 12.06.2025 அன்று திருச்சி மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் மனு தாக்கல் செய்தார். மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் செ. ஆரோக்கியநாதன் ஆஜராகி வாதிட்டார்.

மனுவை விசாரித்த திருச்சி மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தலைவர் டி. சேகர், ஜெ.எஸ். செந்தில்குமார் ஆகியோர் டிவிஎஸ் கிரெடிட் நிதி நிறுவனத்தினர் மனுதாரர் வாங்கி கடனை கட்டி முடித்ததற்கான தடையில்லாச் சான்றிதழை 30 நாள்களுக்குள் வழங்க வேண்டும்.

இல்லையெனில் ரூ. 1 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும். சேவை குறைபாட்டால் மனுதாரருக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு இழப்பீடாக ரூ. 50 ஆயிரமும், வழக்குச் செலவுத் தொகையாக ரூ. 10 ஆயிரத்தையும் 45 நாள்களுக்குள் 9 சதவீத வட்டியுடன் வழங்க வேண்டுமென அண்மையில் உத்தரவு பிறப்பித்தனர்.

காவல் துறையின் போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருச்சியில் புதன்கிழமை நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பேசிய உறையூர் காவல் ஆய்வாளர் பாலகிருஷ்ணன்.

திருச்சி, ஜூலை 8: திருச்சி தனியார் கல்லூரியில் காவல் துறை சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது.

திருச்சி புத்தூர் பகுதியிலுள்ள தனியார் கல்லூரியில் உறையூர் காவல் நிலையம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு உறையூர் காவல் ஆய்வாளர் பாலகிருஷ்ணன் தலைமை வகித்து, போதைப் பொருள் பழக்கத்தால் ஏற்படும் பாதிப்புகள், இழப்புகள் குறித்தும், போதை பழக்கத்திலிருந்து விடுபடுவது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

தொடர்ந்து போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு கையொப்ப இயக்கம் நடைபெற்றது. இதில், போதைப் பொருளுக்கு எதிராக காவலர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், மாணவர்கள் கையொப்பமிட்டனர். நிகழ்ச்சியில் உறையூர் காவல் நிலைய காவலர்கள், தனியார் கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

முதுகலை ஆசிரியர்களுக்கு கலந்தாய்வு: 65 பேருக்கு பணியிட மாறுதல்

திருச்சி, ஜூலை 8: திருச்சியில் புதன்கிழமை நடைபெற்ற முதுகலை ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் கலந்தாய்வில் 65 ஆசிரியர்கள் பணியிட மாறுதல் பெற்றனர்.

திருச்சி மாவட்டத்தில் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கான 2026-27-ஆம் ஆண்டு பொது மாறுதல் கலந்தாய்வு கண்டோன்மென்ட் வெஸ்ட்ரி பள்ளியில் கடந்த ஜூலை 1-இல் தொடங்கி நடைபெறுகிறது. தலைமையாசிரியர்கள், உடற்கல்வி இயக்குநர்களுக்கான கலந்தாய்வு நிறைவுபெற்ற நிலையில், முதுகலை ஆசிரியர்களுக்கு மாவட்டத்திற்குள்ளான பணி மாறுதல் கலந்தாய்வு புதன்கிழமை நடைபெற்றது. இதில் 467 ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

இவர்களில் தமிழில் 6 பேர், ஆங்கிலத்தில் 8 பேர், கணிதத்தில் ஒருவர், இயற்பியலில் 3 பேர், வேதியியலில் 5 பேர், தாவரவியலில் 2 பேர், விலங்கியலில் 3 பேர், உயிரியலில் 4 பேர், கணினி அறிவியலில் 17 பேர், வணிகவியலில் 6 பேர், பொருளியலில் 6 பேர் மற்றும் வரலாறு பாடப் பிரிவில் 4 பேர் என மொத்தம் 65 ஆசிரியர்கள் பணியிட மாறுதல் பெற்றனர். பணியிட மாறுதல் பெற்ற முதுகலை ஆசிரியர்களுக்கு பணியிட மாறுதலுக்கான ஆணையை மாவட்டக் கல்வி அலுவலர் பி. உஷா வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்டக் கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதைத் தொடர்ந்து முதுகலை ஆசிரியர்களுக்கான மாவட்டம் விட்டு மாவட்டம் பணியிட மாறுதலுக்கான பொது மாறுதல் கலந்தாய்வு வியாழக்கிழமை (ஜூலை 9) தொடங்கி ஜூலை 14 வரை நடைபெறவுள்ளது.

உச்சநீதிமன்ற நிலுவை வழக்குகளுக்கு சமரச தீர்வு: திருச்சியில் ஜூலை 16, 17-இல் சிறப்பு அமர்வுகள்

திருச்சி, ஜூலை 8: உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு சமரச முறையில் தீர்வு காண திருச்சி சட்டப் பணிகள் ஆணைக் குழுவில் வரும் 16, 17 ஆம் தேதிகளில் சிறப்பு அமர்வுகள் நடைபெற உள்ளன.

உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கான சிறப்பு மக்கள் நீதிமன்றம் (சிறப்பு லோக் அதாலத்) வரும் ஆகஸ்ட் 23 ஆம் தேதி வரை உச்சநீதிமன்றத்தில் நடைபெறுகிறது. இதில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளக் கூடிய, அடையாளம் காணப்பட்ட திருச்சி மாவட்டம் சார்ந்த வழக்குகளின் விவரங்கள் திருச்சி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட வழக்குகளுக்கு சமரச முறையில் தீர்வு காணும் விதமாக, திருச்சி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழுவில் வரும் 16, 17 ஆம் தேதிகளில் சிறப்பு முன் அமர்வுகள் நடைபெற உள்ளன. இதில் வழக்காடிகள் நேரிலோ அல்லது காணொலி வாயிலாகவோ கலந்து கொண்டு தங்களது வழக்குகளுக்கு தீர்வு காணலாம். இந்த சிறப்பு மக்கள் நீதிமன்றம் முன் முடித்துக்கொள்ளும் வழக்குகளுக்கு மேல்முறையீடு கிடையாது. இந்த வழக்குகளுக்கு செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணத்தை முழுமையாக திரும்பப் பெறலாம். இந்த வாய்ப்பை வழக்காடிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சந்தேகங்களுக்கு திருச்சி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவை நேரிலோ அல்லது dlsatiruchirappalli@gmail.com என்ற மின்னஞ்சல் வாயிலாகவோ அல்லது 0431-2460125 என்ற தொலைபேசி எண்ணிலோ அணுகலாம் என திருச்சி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்த முதியவர் உயிரிழப்பு

திருச்சி, ஜூலை 8: திருவெறும்பூர் அருகே சாலை விபத்தில் காயமடைந்த முதியவர் சிகிச்சைப் பலனின்றி செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

திருவெறும்பூர் அருகேயுள்ள வேங்கூர் சாமிநாதபுரத்தை சேர்ந்தவர் ரங்கராஜ் (69). இவர் கடந்த 5ஆம் தேதி திருச்சி- தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் இருசக்கர வாகனத்தில் வந்தபோது முன்னாள் சென்ற மலைக்கோவில் பகுதியை சேர்ந்த நாராயணன் (52) என்பவர் தனது இருசக்கர வாகனத்தை திருப்பினார்.

அப்போது, பின்னால் வந்த ரங்கராஜ் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் நாராயணன் வாகனத்தின் மீது மோதி கீழே விழுந்தார். இதில் பலத்த காயமடைந்த ரங்கராஜை அக்கம் பக்கத்தினர் மீட்டு துவாக்குடி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

பின்னர் திருச்சி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சைக்கு பலனின்றி செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார். திருவெறும்பூர் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

பஞ்சாப் நேஷனல் வங்கி
...the name you can BANK upon !

SAMB சென்னை, 4வது தளம், PNB டவர்ஸ், எண்.46-49, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை - 600 014.
தொலைபேசி: 044-28112261-90, மின்னஞ்சல்: ZS8341@pnb.bank.in

2002ன் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 8 மற்றும் 9ன் கீழ் அரசாயச் சொத்திற்கான மின் ஏல விற்பனை குறித்து பொதுமக்களுக்கான அறிவிப்பு
கடனீட்டுச் சொத்துக்களை பொக்கவாக்குதல், நிதிச்சொத்துகளை சீரமைத்தல், கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002ன் 8 (6) & 9(1)ன் கீழ் பஞ்சாப் நேஷனல் வங்கியிடம் அடமானத்திலுள்ள ஈடுபெற்ற அசையா சொத்துக்கள் விற்பனை

பஞ்சாப் நேஷனல் வங்கியில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை பஞ்சாப் நேஷனல் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆக்கபூர்வ கலந்தாய்வில் எடுக்கப்பட்டு M/s. TSN Ecotech International Pvt Ltd, கடனின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களிடமிருந்து பெற வேண்டிய கீழே குறிப்பிட்டுள்ள கடன் தொகை மற்றும் அதற்கான வட்டி, இதர செலவுகளையும் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள அசையாச் சொத்துக்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் 27.07.2026 அன்று மின் ஏல விற்பனை செய்யப்படும், என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

ஜாமீன்தாரர் / அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி : 1) திரு. T. N. சிராஜுதீன், எண். 18/3, சமது பள்ளித் தெரு, காஜா நகர், திருச்சி, 620020. 2) திரு. S. முரளிகந்தரம், 25/21, முதல் தெரு, இந்தியன் வங்கி காலனி, சிங்கோ பிட்ச் சாலை, திருச்சிராப்பள்ளி - 620021. 3) திரு. A. விக்னேஷ், 35-A, விஷ்வால் நகர், தஞ்சாவூர் பிரதான சாலை, திருச்சி- 620008.

வங்கிக்கு செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை 30.06.2026 அன்றுள்ளபடி ரூ.31,19,22,426.09 (ரூபாய் முப்பத்து ஒர் கோடியே பத்தொன்பது இலட்சத்து இருபத்து இரண்டு ஆயிரத்து நானூற்று இருபத்து ஆறு மற்றும் பைசா ஒன்பது மட்டும்) மேலும் 01.07.2026 அன்று முதல் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள். 24.09.2018 அன்று கோரிக்கை அறிவிப்பு U/S 13(2) அளிக்கப்பட்டது; 07.01.2019 அன்று கலந்தாய்வு அறிவிப்பு U/S 13(4) அளிக்கப்பட்டது;

வகை- கடன்தாரர் பெயர்: M/s. TSN Ecotech International Pvt Ltd,
ஜாமீன்தாரர்கள்: 1.திரு.T. N. சிராஜுதீன், 2.திரு.S. முரளிகந்தரம், 3. திரு.A விக்னேஷ்.
சொத்துக்களை அடமானம் வைத்திருப்பவரி பெயர் : திரு. T. N. சிராஜுதீன்,

அடமான சொத்துக்களின் விபரங்கள்: திருச்சிராப்பள்ளி இணை -I & II சார்பதிவு மாவட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி வட்டம், K. அபிஷேகபுரம் கிராமம், நகராட்சி பழைய வார்டு எண்.1, பழைய T. சர்வே எண்.47, பழைய T. சர்வே எண்.372/2, துணைப்பிரிவின்படி புதிய சர்வே எண்.372/3, தற்போது மாநகராட்சி பழைய வார்டு K, பிளாக் 20, புதிய வார்டு A மற்றும் B, புதிய பிளாக் 20, புதிய T. சர்வே எண்.130/4D & T. சர்வே எண்.130/4E ஆகியவைகளின் அடங்கிய, திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 620009, திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், K. அபிஷேகபுரம் கிராமம், கன்டோன்மெண்ட், பேட்ஸ் சாலை, T. சர்வே எண்.130/4E, பிளாக் 20, வார்டு AB, இல் அமைந்துள்ள பெரிய வில்லாவீடு 24838சதுர அடி. அதில் காலி நிலம் 9443சதுர அடி (அதாவது கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி 4722சதுர அடி + 4721 சதுர அடி) அதனுடன் அதில் உள்ள தற்காலிக செட். 4722 சதுர அடியின் எல்லைகள்: வடக்கில்: T. சர்வே எண்.130/4D திரு. அசோக்குமார் அவர்களின் சொத்து & T. சர்வே எண்.130/3 பள்ளியாசல் சொத்து; தெற்கில்: T. சர்வே எண்.130/